## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.80/2022** **நாள் : 13.12.2022**

**இன்று (13.12.2022) மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் தலைமையில் நகராட்சி நிருவாக இயக்குநர் அலுவலகத்தில் நகராட்சி மண்டல இயக்குநர்கள், மண்டல செயற்பொறியாளர்கள் மற்றும் நகராட்சி ஆணையர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

இக்கூட்டத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை முறையாக செயல்படுத்தி பிற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக திகழ்வதற்கான நடவடிக்கைகளை அனைத்து அலுவலர்களும் மேற்கொள்ள வேண்டும். நகராட்சி பகுதிகளில் உள்ள பொது கழிவறைகள் மற்றும் சமுதாய கழிவறைகளை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் தொடர்ந்து பராமரித்திட வேண்டும். மேலும், மழைநீர் வடிகால்கள், பூங்காக்கள் மற்றும் குளங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அலுவலர்கள் தொய்வின்றி தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். மேலும், கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நமக்கு நாமே திட்டத்தின் செயல்பாடுகள் சிறந்த முறையில் இருக்க வேண்டும்.

அறிவுசார் மையங்கள், புதிய பூங்காக்கள் அமைத்து முறையாக பராமரித்தல் மற்றும் நகர்ப்புரங்களில் உள்ள நீர்நிலைகளை மேம்படுத்தி நிலத்தடி நீர் உயர்வதற்கான தேவையான நடவடிக்கைகளை அனைவரும் மேற்கொள்ள வேண்டும். சாலைகள் அமைத்தல் மற்றும் நவீன எரிவாயு தகனமேடை கட்டுதல் போன்ற பணிகள் தரமாகவும், விரைவாகவும் மேற்கொள்ள வேண்டும். 15வது மத்திய நிதிக்குழு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள திடக்கழிவு மேலாண்மை பணிகள், குடிநீர் திட்ட பணிகள், சாலை அமைக்கும் போன்ற பணிகள் தரமாகவும், விரைவாகவும் மேற்கொள்ள வேண்டும். தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள சாலை பணிகள் தரம் குறையாமல் மேற்கொள்வதுடன் குறிப்பிட்ட காலத்திற்குள் பணிகள் முடிக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் குடிநீர் திட்டப்பணிகள் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் ஆகியவற்றை ஆணையாளர், நகராட்சிப் பொறியாளர், மண்டல செயற்பொறியாளர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் ஆய்வு செய்து தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். உட்கட்டமைப்பு மற்றம் அடிப்படை வசதி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பேருந்து நிலையம் கட்டும் பணிகள் மற்றும் நீர்நிலைகள் மேம்படுத்தும் பணிகள் ஆகியவை விரைவில் முடிக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். நகராட்சி அலுவலக கட்டிடங்கள் கட்டும் பணிகள் சிறந்த முறையில் மேற்கொள்ளவும், உரிய தரத்துடன் மேற்கொள்வதை உறுதி செய்யவும், குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டமான பள்ளி சிறார்களுக்கான காலைச் சிற்றுண்டி திட்டத்தை சிறந்த முறையில் செயல்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும். நகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் அனைத்து பணிகளையும் நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும் என மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் நகராட்சி நிருவாக ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை திரு.சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. இரா. கிர்லோஷ்குமார், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.கிரண் குராலா, இ.ஆ.ப. உட்பட பல்வேறு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்